MUNICIPAL COUNCIL LIBRARY
JAFFNA.

ரெலிஸ்
ரெலிபோன்
சேவையில்
தம்பிக்கையானவர்கள்
நல்லவர்கள் — வல்லவர்கள்
ரெலிகுளோப்!
ஆர். ஜி. கட்டடம்
பிரான்ஸிஸ் வீதி,
யாழ்நகர்

உதயன்

விலை ரூ. 1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

பாதுகாப்பான சூழலில்
ரெலிபோன் சேவை
ரெலிகுளோப்
இரவு பகல்
24 மணி நேர சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
ஆர். ஜி. கட்டடம்,
பிரான்ஸிஸ் வீதி,
யாழ்நகர்.

படம் 1 யாழ்ப்பாணம் [illegible] ஞு வைகாசி மீ 6 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 றம்ழான் பிறை 10 (20-05-1986) UTHAYAN A MIVERY TAMIL DAIRY [illegible] 156

சுற்றிச் சுற்றி - உறுமி உறுமிக் குண்டுகளைக் கக்கின

யாழ்ப்பாண நகரின் மத்தியில் நேற்று பயங்கரமான விமானத் தாக்குதல்!

2 பொம்மர்களும் 2 'ஹெலி'களும் ஒரு மணி நேரம் மனித வேட்டை

கடைகள் எரிந்தன; பலருக்கு காயம்

— அலுவலகச் செய்தியாளர்கள்: பி. வனிதராஜன், க. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், மே 20

யாழ்ப்பாண நகரில், அதன் மத்திய - கேந்திர இடங்களில், மக்கள் சந்தடி மிக்க இடங்களில், வர்த்தக நிலையங்கள் நிறைந்த இடங்களில், நேற்றுப் பிற்பகல் மிகப் பயங்கரமான விமானத் தாக்குதல் இடம் பெற்றது.

வெளிநாட்டு எதிரியின் தளம் ஒன்றைத் தாக்கும் வேகத்தில் மிக ஆவேசமான தாக்குதல் நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் நகரில் நடந்த முதலாவது விமானத் தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

நேற்று விமானங்கள் நடத்திய மனித வேட்டையில் பலர் காயமுற்றனர். கடைகளும் எரிந்தன.

யாழ் நகரில் நேற்றுப் பிற்பகல் இரண்டு பொம்மர் விமானங்களும், இரண்டு ஹெலிகொப்டர்களும் சுற்றிச் சுற்றி வட்டமிட்டு உறுமி, உறுமி குண்டுகளை வீசி மனித வேட்டை நடத்தின சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற குண்டு வீச்சில் பலர் காயமடைந்தனர்.

யாழ் நகரில் பஜாரில் உள்ள முன்று கடைத் தொகுதிகள் குண்டினால் தாக்கி தீப்பிடித்தன. பல வீடுகள் எரிந்து சேதமடைந்தன. ஆஸ்பத்திரி கட்டடங்கள் கடை சேதமடைந்தன. அதிகிருந்த நோயாளர் ஒருவர் காயமடைந்தார்.

'ஷெல்' தாக்குதல்

பொம்மர்களும், ஹெலிகொப்டர்களும் குண்டு வீச்சு நடாத்தி வெட்டையாடிய அதே நேரத்தில், வேட்டை இராணுவ முகாமிலிருந்து நகரை நோக்கி அடுக்கடுக்கு ஷெல் குண்டுகள் தீர்க்கப்பட்டன.

நேற்று மாலை 4 மணி முதல் ஐந்து மணி வரை வானவெளியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் பறந்த விமானப் பாதுகாப்புடன் வேட்டைக்குத் திரும்பிச் சென்றன.

நேற்று முன்தினம் காலை 6.30 மணியளவில் வேட்டை இராணுவ முகாமில் இருந்து புறப்பட்டவிமானங்கள் வன்னிக்கு அருகே இந்த வாகனங்கள் நிற்கவேண்டிய நாயிற்று

[illegible] முறைப்படி பின்னரே சிப்பாய்கள் வேட்டை [illegible]

(4- ஆம் பக்கம் பார்க்க)

(4 ஆம் பக்கம் பார்க்க)

கவச வாகனங்கள் கோட்டைக்கு மீண்டன

யாழ்ப்பாணம், மே 20

யாழ் வண்ணைப் பாலத்திற்கு அண்மையில் 29 மணித்தியாலங்களாக நின்று நின்ற கவச

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

20-05-1986
செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:
10.32 முதல் 11.52 வரை
ராகுகாலம்:
2.52 முதல் 4.22 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொதுநேரம்
எமதண்டி விநாடி

	நேரம்
சதுர்தசி:-	4.18
மஸ்பிப:-	6.21

வயாவிளான் வித்தியாலயத்தில்

4 மாணவிகளும் 8 பேரும் எங்கே?

தளபதி கையை விரிக்கிறார்

யாழ்ப்பாணம், மே 20

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய விடுதி மாணவர்கள், மாணவிகள், ஊழியர்கள் 12 பேர் பற்றி இதுவரை எதுவித தகவலும் இல்லை.

மேற்படி கல்லூரியில் கடந்த முன்று நாட்களாக இராணுவத்தினர் முகாமிட்டுள்ளனர்.

கல்லூரி விடுதியில் தங்கி இருந்த நான்கு மாணவிகளும் ஐந்து மாணவர்களும் விடுதிப் பாதுகாவலரும் இரண்டு ஊழியர்களுமே காணாமற் போனவர்கள் ஆவர்.

விடுதிப் பாதுகாவலர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

[illegible] சேர்ந்த வி. செல்வத்துரை, கொக்குவிலைச் சேர்ந்த வி. முருகேசு [illegible] என்பவர்களே காணாமற்போன ஊழியர்கள்.

காணாமற்போனோர் நிலை பற்றி பாடசாலை அதிபர் வரை அதிபர் மூலமாக இராணுவத் தளபதியுடன் தொடர்பு கொண்டோம்.

எவரையும் இராணுவத்தினர் வதை செய்யவில்லை என்று அப்போது தெரிவிக்கப்பட்டதாம்

ஆஸ்பத்திரியும் சேதமுற்றது

நோயாளிக்கு காயம்

நல்லூர், மே 20

நேற்றுமாலை யாழ்நகரில் நடைபெற்ற பகல்நேர விமானத் தாக்குதலில் ஆஸ்பத்திரியும் சேதமடைந்தது.

நோயாளி ஒருவரும் காயமடைந்தார்.

விமானக் குண்டுவீச்சு, ஹெலிகொப்டர் தாக்குதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டபோது யாழ் ஆஸ்பத்திரியில் இரண்டு வார்ட்டுகளில் 'சீற்'றுக்கள் உடைந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவத் தீர்வை நோக்கி இலங்கை செல்வது போல்

தெரிகிறது - ராஜீவ்

புதுடில்லி, மே 19

இராணுவத் தீர்வை நோக்கிய இலங்கை சென்று கொண்டு இருப்பது போல் தெரிகிறது பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வைக் காணும் வாய்ப்பு இல்லாமல் உள்ளது. இலங்கை அரசு அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் என்று இந்தியா நம்புகிறது.

இப்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஆபிரிக்க நாடுகளின் விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் பிரதமர் காந்தி செய்தியாளர்களிடம் தெரிவித்தவையில் மேலும் சொன்னதாவது:-

இந்தியக் குழு, இலங்கை சென்று அங்குள்ள நிலவரங்களுடன் பயனுள்ள பேச்சுக்களை நடத்தியது.

பேச்சுக்களைத் தொடர்ந்து சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் பலனளிக்கும் என்று நாம் நம்பினோம்.

நான் ஆபிரிக்க விஜயத்தை மேற்கொள்ளும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வயோதிபர் பலி!

ஷெல் தாக்குதலினால் 25க்கும் அதிகமானோர் காயம்

நல்லூர், மே 20

யாழ்ப்பாணம் கோட்டை முகாமிலிருந்து நேற்று முன்றாவது நாளாக ஷெல் தாக்குதல்கள் துப்பாக்கிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார். 25க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். வீடுகள் கடைகள் சேதமடைந்தன.

நேற்றுக் காலை முதல் யாழ்நகரின் பல இடங்களில் குண்டுகள் வெடித்தன. துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்பட்டன.

ஷெல் தாக்குதல்களினால் யாழ் ரயில் நிலையத்திற்கு அருகேயுள்ள இரண்டு வீடுகளும், கண்டி வீதியில் உள்ள ஒருகடையும் சேதமடைந்தன

ஷெல் தாக்குதலின் போது கண்டி வீதியால் வந்தவோண்டி ருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவ நடைபவனி வந்த வழியே திரும்பியது

யாழ்ப்பாணம், மே.20

ஆயிரவு முகாமிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி முன்னேறி வந்த இராணுவ சி பாதுகாவலின் நடைபவனி நேற்றுத் நடைப்பட்டது சிப்பாய்கள் வரவண்டிகள் சகிதம் தம் வந்தவழியே திரும்பிச் சென்றனர்.

நடைபவனி வரும் பாதையில் உள்ள பாலத்தை ஒன்றை போராளிகள் கவிழ்த்துவிட்டதாலும்—

இதனால் சிப்பாய்கள் முன்னேறமுடியாமல் போனதினால் தாக்கினர் என்றும் சொல்லப்படுகிறது

இதேவேளை சிப்பாய்களை முன்னேறவிடாது போராளிகள் தாக்கினர் என்றும் சொல்லப்படுகிறது

(4 ஆம் பக்கம் பார்க்க)

தடைப்பட்ட வாகனங்கள் வந்தன

மூன்று தினங்கள் உயிரைக் கையில் பிடித்திருந்த பயணிகள்

நல்லூர், மே 20

கடந்த முன்று நாட்களாக பண்ணாகத்தும் [illegible] யிலும் மடத்திலும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு தஞ்சமடைந்திருந்தோம்.

கொழும்பிலிருந்து வந்த [illegible] வாகனங்கள் கடந்த முன்று நாட்கள் முதல்வரை, கிளிநொச்சி பகுதியில் நடுத்த நிற்று நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

இந்த வாகனத்தொடரில் 60 க்கு மேற்பட்ட வாகனத்தில் வந்த ஒரு பிரயாணி நவக்கு ஏற்பட்ட அனுபவம்பற்றி எமது செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் சொன்னதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து புறப்பட்ட இவ்வாகனம் இயக்கச்சிப் பகுதியில் போராளிகள்-சிப்பாய்கள் மோதுவதாக அறிந்து முதல்கண்டி மடத்தில் தங்கி நின்றோம்.

அன்றிரவு பண்ணாகத்தும் மடத்திலும் பதுங்கி இருந்தோம்.

பின்னர் ஞாயிறு காலை பாழ்ப்பாணம் நோக்கிமுன்னேறியபோது இருந்து புறப்பட்ட நாம் போராளிகள் தொடர்ந்தும் தாக்குதல் நடத்தினர் (4 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியா வரை விசேட ரயில் சேவை

கொழும்பு, மே 20

வெசாக்தினத்தை முன்னிட்டு கொழும்பிலிருந்து வவுனியா வரை நாளையும், 22, 23, 26 ஆம் திகதிகளிலும் விசேட ரயில் சேவை நடைபெறுகிறது.

காலை 5-30 மணிக்கு மகுதானியிலிருந்து புறப்படும் விசேட ரயில் பகல் 10-15 க்கு வவுனியாவை வந்தடையும்.

நண்பகல் 12-00 மணிக்கு வவுனியாவிலிருந்து புறப்படும் ரயில் மாலை மகுதானியைச் சென்றடையும்.

கடற்படைப் படகுகள்

வல்வெட்டித்துறையின் தகர்ப்பு

தாக்குதல்கள் குறிதது புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், மே 20

நேற்று பிற்பகல் வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கடற்படை ரோந்து படகு ஒன்றும் 'கன் போர்ட்' ஒன்றும் முற்றாகத் தகர்க்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகள் இதனை அறிவித்திருக்கிறார்கள்.

வடக்குநோக்கி நகர்ந்து வரும் மோதலைத் தொடர்பாக ஆரிக்கை வெளியிட்டு இரக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தொடர்ந்துமூன்றாவது நாளாக கோட்டை, வல்வெட்டித்துறை, காரைநகர், டலாவி முகாம்களிலிருந்து விட்டு பொம்மர் விமானங்கள், ஹெலிகொப்டர் பாதுகாப்புடன் வெளியே வரமுயற்சித்த ஆயுதப் படையினரை எமது வீரர்கள் விரட்டி முகாமிற்குள்ளேயே தள்ளினர்.

யாழ் நகரில் பொம்மர்கள் குண்டு வீச முன்னர் எமது வீரர்கள் எதிர்த்தாக்குதல் நடத்தினார்கள் ஆனால் அவை பின்வாங்கி மறைந்தன

அக்கிப்பிட்டியில் ஹெலிகொப்டரில் வந்திறங்கிய இராணுவம் அழித்துச் சிதைக்கப்பட்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

கண்ணிவெடி!

மட்டக்களப்பில் 14 சிப்பாய்கள் காயம்

மட்டக்களப்பு, மே 20

வாகரைச்சேனை, — கல்லடா வீதியில் கண்ணி வெடியில் லாரி ஒன்று சிக்கியதில் 14 சிப்பாய்கள் படுகாயமடைந்தனர். இவர்களில் ஏழு பேரின் நிலை ஆபத்தானதாகத் தெரிகிறது.

நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் பெரிய [illegible] என்னும் இடத்தில் இந்தக் கண்ணி வெடிச் சம்பவம் நிகழ்ந்தது.

ஆபத்தான நிலையில் இருக்கும் 7 சிப்பாய்களும் உடனடியாக ஹெலி கொப்டர் மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்டனர் மற்றவர்கள் 7 பேரும் மொனறாகலை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

வெடியில் சிக்கிய லாரி பகுதி சேதமடைந்தது

ஓர், ஓர் நாடுகள் இரண்டு யுத்தப் பிரடனம் செய்து போர் நடந்கையில் [illegible] விமானதாக்குதல் நடக்கிறது [illegible] ஒன்று மிகமாமான பொதுசனம் போய்வாற இடத்தில் பொம்மர் விமானம் [illegible] விடுவோர், எம்மீது வேட்க யார் என் நினைப்பார்கள்...!

இராணுவ நடைபவனி வந்த வழியே திரும்பியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடற்றொழில் விரிவாக்க சேவை சங்கங்கள் கலைப்பு

காரைநகர்துறை, மே 20

கடற்றொழிலாளர்களின் நலன்களை பேணுவதை நோக்கமாகக் கொண்ட கடற்றொழில் விரிவாக்க சேவைச் சங்கங்கள் யாவும் கலைக்கப்பட்டுள்ளன.

வாழ்- மாவட்ட கடற்றொழில் விரிவாக்க அதிகாரியாலேயே இவ்வுத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கடலதொழிலில் வாழும் கடற்றொழில் செய்யாதவர்களுக்கு ஆவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நிவாரணம் பெற்றுக்கொடுக்கவும், அவர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் மேலதிகாரிகளிடம் கவனத்திற்கு கொண்டுவரவும் இச்சங்கங்கள் உருவாக்கப்பட்டன.

மேற்படி கடற்றொழில் விரிவாக்க சேவை சங்கங்களை தற்போது சங்கங்களாக மாறி அந்த அந்த சங்கத்தினரிடையே குறித்த நிருபர் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து புதிய சங்கத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

இச்சங்கங்களுக்குப் பதிலாக கிராமிய கட்டமைப்பில் இயங்கக் கூடியதாக கிராமிய கடற்றொழில் சமூக அபிவிருத்தி அமைப்பு என்ற பெயரில் சங்கங்களை அமைக்கும்படியும் மேற்படி கற்றறிநருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து புதிய சங்கத்தை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகிறது.

வீட்டில் கள் அருந்தோம் மதுப்பிரியர் சந்திகளில் கோஷம்!

வடமராட்சி, மே 20

"வீட்டில் கள் அருந்தமாட்டோம்"

இவ்வாறு கொரவமான உதவிவேளாதர்கள் கட்சியை சேர்ந்த மதுப்பிரியர்கள் சந்திகளில் கோஷம் எழுப்பினர்.

இச்சம்பவம் உடுப்பிட்டி, கட்டைவேலியிலும் பருத்தித்துறையிலும் நடைபெற்றது

உடுப்பிட்டி கட்டைவேலி தெற்கு, வடமேற்கு கிராமங்களில் கூட்டுறவு சங்க ஊழியர்களும் கூட்டுறவு புனருத்தாரண உறுப்பினர்களும் இணைந்து சட்டவிரோதமாக வீட்டில் கள்ளு விற்பனை செய்வோருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் அறிவித்தனர்.

அண்மையில் இத்திட்டம் பலரின் ஒத்துழைப்போடு வீடுவீடாக கள்ளு அருந்தி கொண்டிருந்த அரசாங்க, தனியார் துறை உத்தியோகத்தர் உட்பட பலரைக் கூட்டுறவு ஊழியர் கறிறிகளாகத் துப்பிரித்தார்கள்

இவர்களை ஒரு தனியார் பஸ்ஸில் ஏற்றி உடுப்பிட்டி, கட்டைவேலிப் பகுதியிலுள்ள மக்கள் அதிகமாகவுள்ள சந்திகளுக்கு அழைத்துச் சென்றனர். இவர்கள் சந்திகள் தோறும் "காலையிலிருந்து "வீட்டில் கள்ளு அருந்தமாட்டோம்" எனக்கோஷமிட்டனர். பின்பு பிரதான வீதியில் உள்ள சந்தியில் இவர்களை இறக்கியபோதும் வீட்டில் கள்ளு அருந்த மாட்டோம் என மறுபடியும் கோஷம் எழுப்பினர்.

சட்டவிரோதமான கள்ளுக் குடிப்போர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட முதல் நடவடிக்கை இது எனும் முதல் முறை பிடிக்கப்பட்டோருக்கு மன்விடுப்பு வழங்கப்பட்டது இனிமேல் பிரதேச வலயங்களிலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வளர்ச்சி உதவி ஆணையாளர் பெருமிதம்

வட்டுக்கோட்டை, மே 20

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை முன்னேறி வருவதைக்கண்டு மகிழ்ச்சி அடைகின்றேன் இதன் வளர்ச்சிக்கு வைத்தியர்கள் சபை முதல் தொழிலாளர் அனைத்தரும் அயராது உழைக்கவேண்டும் என்று கூட்டுறவு சங்கங்களுக்கான உதவி ஆணையாளர் திரு. மு. கனகராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது கூறியதாவது:

இந்த வைத்தியசாலை மேலும் முன்னேறுவதற்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டியுள்ளது.

இந்த வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் ஒன்று அவசியம் தேவைப்படுகிறது இத்தேவையை நிறைவேற்ற சபையின் அனுமதியை எழுத்து மூலம் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த வைத்தியசாலையின் பணிப்பாளர் சபை கமார் ஆறுவருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இயங்கி வருகின்றது இதனால் காலவரையறை விட்ட இந்தப் பணியாளர் சபையை மாற்றிப் புதிய பணிப்பாளர் சபை ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த வைத்தியசாலை முடிய நிலையில் இருக்கும் போதுடமாகான மருத்துவ காரணிகள் சங்கம் இனைப் பொறுப்பேற்று திறப்பட நடத்தி வருவதையிட்டு நான் அவர்களைப் பாராட்டுகின்றேன்.

இப்படி அவர் குறிப்பிட்டார்.

இவ்வைத்தியசாலைக்கு கமார் ஒரு எட்சரத்து இரு நூறாயிரம் ரூபாவுக்கு மேற்பட்டதான விலையில் அம்புலன்ஸ் ஒன்று வாங்குவதென்றும் குடி ஒரு லட்சம் செலவில் சிற்றுண்டிச் சாலையை நவீன முறையில் திருத்தி யமைப்பதென்றும் 15-6-86 இல் கழிபரம் விக்ரோறியா கல்லூரியில் வருடாந்தப் பொதுக்கூட்டத்தை நடத்துவதென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

தும்பு ஆலையில் தீ

கொழும்பு, மே.20

கிராண்டபாலில் உள்ள தும்புத் தொழிற்சாலை ஒன்று ஞாயிறு மாலை திடீரெனத் தீப்பிடித்து எரிந்தது.

அற்று பின்விரவில் தீ கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டது.

புலோலியில் அமைப்பு கூட்டம்

யாழ்ப்பாணம், மே 20

பருத்தித்துறைத் தேர்தல் தொகுதிக்கான மத்திய பிரசாரக் குழு அமைப்புக்கு முன்னோடியான கிராம மட்டத்திற்கு பிரசாரக் குழு கரிசலில் வருத்தித்துறை நகரசபை வட்டாரங்களான மணல்காடு கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை மாலை புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

நகரசபையில் ஒன்பது வட்டாரம் என்ன பிரசாரங்களையும் வந்து கலந்து கடமையாற்றி செம்மையாக பருத்தித்துறைப் பிரசாரக் குழு சேர்க்கப்பட்டுள்ளது.

பெற்றோர்-ஆசிரியர்-மாணவர் இணைப்பு குறித்து சுற்று நிருபம்

பரலி, மே 20

பாடசாலைகளில் பெற்றோர்களினதும்- ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் இணைப்பை ஏற்படுத்தும் முகமாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் யாழ் கல்வி பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அதிபர்களுக்கு சுற்று நிருபம் அனுப்பி உள்ளார்.

'பாடசாலை மாணவர்களிடம் கல்வி வளர்ச்சியின் கண்களாக இருப்பவர்கள் ஆசிரியர்களும், பெற்றோர்களும் என்பது எல்லோர்மாலுமான நம்பிக்கையாகும்.

"ஆசிரியரும், பெற்றோரும் இணைந்து ஒரு நெருங்கிய மாணவரை எழிடத்திலும் அவர்களது கல்விமான்களை நம்பிக்கையாகும்.

"ஆசிரியர்களும்— பெற்றோர்களும் சந்திப்பை ஏற்படுத்த பாடசாலை அதிபர்கள் ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென" கேட்கப்பட்டுள்ளது.

இந்தவாரம் மே மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் இருவாரத்திற்கு ஒரு நிகழ்த்த தெரிந்தெடுத்த ஆண்டு 3, 4, 7 ஆகிய வகுப்பு மாணவர்களின் பெற்றோரை, ஒவ்வொரு வகுப்பாசிரியர்களும் சந்திப்பது, மாணவர் பற்றிய குறை நிறைகளை கலந்துரையாடி "பரிகாரம் தேடிக்கொள்ளல்" வகுப்புக்களில் கற்பிக்க வாய்ப்பளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பல்கலைக்கழகத்திற்கு 170 பேர் அனுமதி பெறுவர்

மட்டக்களப்பு மே 20

கிழக்கிலங்கை பல்கலைக் கழகமாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள மட்டக்களப்பு வளாகக் கல்லூரியில் எதிர்வரும் ஆண்டோடிற்கு ஆரம்பிக்கும் கல்விமான்களுக்கு 170 மாணவர்கள் அனுமதி பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன

இந்தவாரம் கல்லூரிப் பணிப்பாளர் பேராசிரியர் கே. கனகசபாபதி தெரிவித்தார்

தற்போது விவசாயம்-25, பொதுநிலம்-30, உயிரியல்-30 ஆக இருக்கும் மாணவர் எண்ணிக்கை முறையே 40, 40, 60 என அதிகரிக்கப்படும்.

அத்தோடு புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கணக்கு முகாமைத்துவப் பீடத்திற்கு 30 பேர் அனுமதி பெறுவார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

மத பாதுகாப்பு குழு ஊர்வலம்

யாழ்ப்பாணம், மே.20

நாளைபுதன்கிழமை காலை 9 மணிக்கு மதபாதுகாப்புக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஊர்வலம் ஒன்று வண்ணை சிவன் கோவிலடியில் ஆரம்பமாகவுள்ளது

சகல மத மக்களையும் ஒன்று கற்றுமாறு கோரப்பட்டுள்ள இந்த ஊர்வலம் சிறுபான்மையின்மீது பத்தில் கையைப் பிடை உடனடியாக நிறுத்துமாறு மைஜர் ஒன்றை அரச அதிபரிடம் கையளிக்குமாம்.

யாழ்-முஸ்லிம் மகிளிர் வாசகர் அடைக்கலமாதா கோவில் ஆகிய முக்கிய சமயஸ்தலங்கள் அடங்கிய வழியில் இந்த ஊர்வலம் நடத்தப்பட்டு கச்சேரியை அடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது

நியமனத்துக்கு ஆட்சேபம்

மட்டக்களப்பு மே 20

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளூராட்சி எழுதுவினைஞர்சேவைக்கு வெளி மாவட்டத்தவர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அது குறித்து அரச அதிபர் திரு. எம். அத்தோலி முத்து தலை ஆட்சேவினைக்கு உள்ளூராட்சி சேவை ஆணைக்குழுவுக்கு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாநகர சபை மாவட்ட அபிவிருத்தி சபை ஆலுவலகங்களுக்கு அண்மையில் நடைபெற்ற ஆண்பாலாரை (11பேர்) முக்கியவி (1) ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் நியமனம் பெற்றுள்ளதையடுத்து பொதுக்கள் அரச அதிபரிடம் தெரிவித்த புகாரையடுத்தே அரச அதிபர் இந்நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அரச பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. சே இராசதுரை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே டபிள்யூ தேவநாயகம் மாகாண [illegible] அமைச்சர் [illegible] ஆகியோரிடம் [illegible] வருவதாக அரச அதிபர் [illegible] தெரிவித்தார்.

எந்த நடிகை என்றாலும் நடிக்கத் தயார் - சவுண்டமணி

ஹஸ்யகுமாரத்தி கதிரையுலகில் நுழைந்த சவுண்டமணி, இன்று தனாதாயகை கத்தல்ஸ் ஹீரோவாக உயர்ந்துள்ளார்.

அவரின் பல படங்கள் ஒரேயடியாக வருவதுடன் ஒரு வெற்றி பெற்றுள்ளன.

இவரைப் பற்றிய சில வதந்திகள் இப்பொழுது நிலையுலகில் அடிபடுகின்றன அது பற்றி அவர் கறுறோர்:

'நான் குறிப்பிட்ட நடிகையுடன் நான் நடிப்பேன் என்று வற்புறுத்துவதாக சொல்வது ஆதாரமே இல்லாத வதந்தி

ஏனெனில் எனக்கு ஆட்ஸ்டுடியோவின் கஷ்டம் தெரியும். நான் முதன் முதலாக கதாநாயகனாக நடித்த படத்தில் புதுமுகம் ஸ்ரீவித்தியா இணையாக நடித்தார்.

ஸ்ரீவித்தியாவைப் பொறுத்தவரை நான் புதுமுகம் போல இருந்தாலும் எல்லா ஆர்டிஸ்டாக நினைத்து இணைந்து நடித்தார் அது போலத்தான் நானும் புதுமுகம் பழையவர் என்றுயார் நடித்தாலும் அதற்கு நான் கவனிப்பதுமு இல்லை

கதாநாயகியாக நடிக்க வைப்பது என்பது தயாரிப்பாளரின் பொருளாதார வசதியைப் பொறுத்தது.

அவர் வசதிக்குஏற்ப பெரிய நடிகையோ, புதுமுகமோ ஜூனியர் ஆர்டிஸ்டோ அவருடன் நடிப்பதுதான் என் கடமை.

தற்போது நான் நடித்து வரும் எல்லாப் படங்களிலுமே ஒவ்வொரு படத்திலும் வெவ்வேறு நடிகைகள்தான் நடித்திருக்கிறார்கள் இதிலிருந்து இது வதந்திகள் என்று சொல்லத் தேவை இல்லை.

மேலும் ஒரே ஆர்டிஸ்டுடன் தொடர்ந்து சேர்ந்து நடித்துக் கொண்டிருந்தால் மக்களுக்கும் சலித்து விடும்

எந்த நடிகையை எனக்கு ஜோடியாக நடிக்க வைக்க வேண்டும் என நான் வற்புறுத்துவிறேன் என்று எனக்கே தெரியவில்லை எல்லா முந்திரியும் விதம்தான் வாசோ ஒருவர் செய்யும்புத்திலிலில் ஒன்றுதான் இது

நான் காமெடியனாக பிரபலமாக இருந்த போதே மனோரமா, சோகவரசரனா, எஸ் ஆர் விஜயா, காந்திமதி, ஸ்ரீலேகா என்று தயாரிப்பாளர் ஒப்பந்தம் செய்யும் நடிகைகளுடன்தான் நடித்து இருக்கிறேன்

கடவுள் நம்பிக்கை அதிகம் உள்ளவன் நான் இதுதான் எந்த வதந்திகளைப் பற்றியும் கவலைப்படாமல் என் வழியே நடைபோடுகிறேன் என்றார்.



நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 20

யாழ் இலக்கிய வட்டத்தின் வெளியீடான க. பாலசுந்தரத்தின் 'அந்திய விருந்தாளி' நூல் வெளியீடு மே மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறுகிறது.

செம்பியன் செல்வன் தலைமை வகிப்பார்.

யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம், துர்க்கா தரத்தரி செல்வி நகிலம்மா அம்மாக்குட்டி ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவார்கள்

பேராசிரியர் அ சண்முகதாஸ் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

நாவலட்டி வித்தியானந்தா கல்லூரி எதிரேவேல் பிள்ளையிடம் இருந்து திரு இ கந்தசாமி (தேவன்) முதலாவது பிரதியைப் பெறுவார்

கலைப்பேராசிரியர் எரி பொன்னுத்துரை, லலா நிதி, நா. கப்பிரமணியம், லலா நிதி என் மெனகுரு ஆகியோர் ஆய்வுரைகள் நிகழ்த்துவார்.

கிழக்கு விவசாயிகள்

டீசல் எடுத்துச் செல்ல விசேட பெர்மிட் வழங்குக

மட்டக்களப்பு பிரசைகள் குழு கோரிக்கை

மட்டக்களப்பு, மே 20

மட்டக்களப்புமாவட்ட விவசாயிகளின் பாவனைக்குரிய டீசல் எடுத்துச் செல்ல விசேட 'பெர்மிட்' வழங்குவது தொடர்பாக ஆயுதப்படைகளுடனும் அதிகாரிகளுடனும் ஆலோசனை மேற்கொள்ளப்படும்

இத்தகவலை மட்டக்களப்பு அரசாங்க அதிபர் திரு எம் அத்தோலிமுத்து தம்மைச் சந்தித்த மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிடம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு விவசாயிகள் இன்றைய சூழ்நிலையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் பிரஜைகள் குழு சார்பில் திருப்பர் திரு எம் அத்தோலிமுத்து தம்மைச் சந்தித்த மட்டக்களப்பு பிரஜைகள் குழுவிடம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு விவசாயிகள் இன்றைய சூழ்நிலையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஏற்பாடு செய்யப்பட்ட இச்சந்திப்பில் பிரஜைகள் குழு சார்பில் திருப்பர் இரா. உதயகுமார் திரு எஸ் சண்முகநாதன், திரு எஸ் சந்தரன், ஆகியோர் இடம் பெற்றனர்

விவசாயப் பிரதேசங்களுக்கு செல்லும் வாகனங்களிலுள்ள பாலங்கள், மதகுகள் சேதமாக்கப்பட்டுள்ளதால் போக்கு வரத்து தடுக்கப்பட்டுள்ளது இதனால் உழவுயந்திரங்களை நிலங்களுக்கு கொண்டு வந்துமட்டு நிரப் முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் விசேட பெர்மிட் வழங்கப்பட வேண்டும்

வயல்களை கூலி செய்யும் விவசாயிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம், வதை செய்தல், உழவு இயந்திரம் உடைமைகள் சேதமாக்கல், முகாம் வழியாகச் செல்லும் விவசாயிகளை உழவு இயந்திரம் வழிமறிக்கப்பட்டு முகாம்களில் வேலை செய்யாது பணிக்கப் படல் போன்றவை நிறுத்தப்பட வேண்டும்.

விவசாயிகளுக்கு விசேட அடையாள அட்டை, சலுகாமதிப்பு வழங்கப்பட வேண்டும்.

இவைகளோன்றோரிக்கைகளைப் பிரஜைகள் குழுவினர் வலியுறுத்தினர்

மேற்படி விடயங்களை தான் இணைப்பதாகவும் கலந்துரையாடி வருவதாக அரச அதிபர் தெரிவித்தார்.

மீனவருக்கு உரிய விசேட முத்திரைகள் மீண்டும் 2 மாதங்களுக்கு

வேலணை, மே 20

கடல் பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் வரிதிக்கப்பட்ட மீனவர்களுக்கு ஏற்கனவே ஒரு மாதகாலத்திற்கான வழங்கப்பட்ட விசேட முத்திரைகள் மீண்டும் இரு மாதங்களுக்கு செல்லுபடியாகும் என்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர், இது சம்பந்தமான உத்தரவை கடல் சூழ்ந்த, மற்றும் கடற்பிரதேசங்களில் உள்ள உதவி அரசாங்க அதிபர்களுக்கும் பிறப்பித்திருக்கிறார்.

இந்த உத்தரவுக்கு இணங்க ஏற்கனவே மீனவர்களுக்கு வழங்கப்பட்ட விசேட முத்திரைகளை, அவர்கள் முன்பு பொருள்கள் வாங்கிய கடற்றொழிலாளர்கள் கொடுத்து இருமாதகாலங்களுக்கான பொருட்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் தடம புரண்டது

திருகோணமலை, மே 20

பிரிமா மாவத்திலிருந்து சாக்குமூடைகளை ஏற்றிய சரக்கு ரயில் ஞாயிறு காலை சந்தனாய்க்கு அருகில் தடம் புரண்டது.

சந்தனாய்க்கு அருகில் கட்டு உடைப்பினால் அங்கு ஓடிட்டுப்போன ரயில் பாதைக்குப் பதில் புதிய ரயில்பாதை போடப்பட்டு வந்தது. அந்த இரு நிலையில் சரக்கு ரயில் தடம் புரண்டது.

[illegible] ஞாயிறு [illegible] பாதை [illegible] பட்டது

கொழும்பு தொடர்ந்து சோதனை

கொழும்பு, மே 20

கொழும்பு, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, கோட்டை ஆகிய வதிகளில் ஆயுதப்படையினர் ஞாயிற்றுக்கிழமை மாலையும் பலத்த சோதனை நடத்தினர்கள்.

வீதிகளில் நடமாடிய மக்கள் எடுத்துச் செல்லும் பொதிகள் துருவித் துருவி சோதனையிடப்பட்டன.

நவாலியில் இலவச வைத்திய பரிசோதனை

வட்டுக்கோட்டை மே 20

நவாலி வடக்கு எம் கி ஏ மண்டபத்தில் நவாலி வடக்கு எம். கி. ஏ கழகத்தினரால் இலவச வைத்திய பரிசோதனை ஒன்று நடத்தப்பட்டது.

கழகத்தலைவர் திரு. ஜே ஐ கம்பிராசா தலைமை வகித்து இந்த மருத்துவ பரிசோதனையை ஆரம்பித்து விளக்கமளித்தார்.

யாழ் பல்கலைக்கழக டாக்டர் எஸ். இராஜகுமார், மானிப்பாய்ப்பகுதி வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி சந்திரசாமி டாக்டர் கே வெங்கடேஷ் ஆகியோர் இலவசமாக இந்த வைத்திய பரிசோதனையை நடத்தினர்.

இந்த இலவச மருத்துவ பரிசோதனை நவாலி வடக்கு எம். கி. ஏவின் இரவுப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் நவாலி அகதி முகாமிலுள்ள பிள்ளைகளுக்கும் நடத்தப்பட்டது.

கருத்தரங்கு

ஆசிரியர்களின் வகுப்பறைப் படுத்தலிலும் வழிநடத்தலிலுமே மாணவர்களின் கல்வியும், எதிர்காலமும் தங்கியுள்ளன.

வடமாநில பிரதம கல்விப்பணிப்பாளர் கே சந்தசாமிஇப்படிக் குறிப்பிட்டார்.

கணிதபாட சேவைக்கால பயிற்சி ஆசிரியர்களுக்கான ஒருநாள் கருத்தரங்கை தொடக்கி வைத்துப் பேசுகையிலே கே இவ்விதம்குறிப்பிட்டார்.

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் இக்கருத்தரங்கில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களைச் சேர்ந்த கணித ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பொலீஸ் நிலையத்துக்கு உஷார் உத்தரவு

சனிக்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் 72 மணித்தியாலங்களுக்கு மிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டிருந்தது.

தீவிரவாதிகளின் எந்தத் தாக்குதலையும் சமாளிக்கத், தயாராக இருக்கும்படி பொலீஸ் நிலையங்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாண ஒழுங்குகள்

சிங்கப்பூர் மார்க்கமாக கப்பலில் (Ship)

மாலுமிகளாக (Crews)

செர்பவர்களுக்கும்

சிங்கப்பூரில்

வீட்டுப் பணிப்பெண்கள்

(House-maids)

செல்ல விரும்புகிறவர்களுக்கும் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

அத்துடன்

பாஸ்போர்ட் (Passport), பொண்ட் (Bond)

ஆகியவும் செய்துகொடுக்கப்படும்

தொடர்பு கொள்ளவும்:

விஜயலங்கா எக்ஸ்போர்ட்ஸ்

அன் கொன்ராக்ஸ் கம்பனி

Vijayalanka Exports & Contracts Company

பருத்தித்துறை வீதி,

கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

(உதவி அரசாங்க அதிபர் பணிமனை முன்பாக)

உதய சங்கற்பம்

உண்மையே உயிர் உயர்த்தும் ஊனி நோக்கமியே
நிறைந்த செல்வம். இவை இரண்டையும் வாழ்வில் கைப்பட
பிடித்தால் உள்ளத வாழ்வு தானே வந்து சேரும்.
-மகாத்மா காந்திஜி

உதயன்
இலங்கை - அரசியல் - அரு தினசரி
இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
கொழும்பு 11 22078
வெளியீடு 20 மே 86 தொ 23

சரத்தின் மறைவு; மனிதநேயத்தின் இழப்பு

கலவான எம் பி சரத் முத்தெட்டுவேகம காலமானார் என்பதான செய்தியை கேள்வியுற்றபோது நடமுடியவில்லை. செய்தி சரிதான் என்று ஊர்ஜிதமானபோது நெஞ்சு துணுக்குற்றது.

சரத் எனது உறவினர் அல்லர், நெருங்கிய நண்பரும் அல்லர். ஓர் அரசியல் வாதிகளும் பத்திரிகையாளருக்கும் இருக்கும் சாதாரண தொடர்பு அதுவும் 1981 ஆம் ஆண்டு இடைத் தேர்தலில் வெற்றி பெற்று எம் பி யானதன் பின்னர் ஏற்பட்ட தொடர்பு ஆனால் நெருங்கிய உறவினரை இழந்துவிட்டது போன்ற உணர்வு மனதை நெருடியது.

திரு முத்தெட்டுவேகம தமிழ் மக்களின் உற்ற நண்பன் அவரது இடுகுசாலி அரசியல் சித்தாந்தங்களுடன் ஒத்துப்போகாது தமிழ் மக்கள் கூட அவரைத் தமது அபிமான நண்பர்களாக கருதினர் அதனால் திரு சரத்தின் மரணம் ஈழத்தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பெரும் இழப்பு அவர் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்தான் ஆனால் ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்ட எல்லா மக்களுக்காகவும் துணிவுடன் குரல் கொடுத்த வீரர் அதனால்தான் அவர் ஈழத்தமிழ் மக்களின் அபிமான நண்பராக முடிந்தது.

நீதி எங்கு இருக்கிறதோ, நியாயம் எங்கு இருக்கிறதோ அந்தப் பக்கம் நிற்பவர் சரத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியை, அவர்கள் படும் கஷ்டங்களை வெளி உலகத்துக்கு எடுத்துச் சொன்ன பெருமை அவருக்கு மட்டுமே உண்டு.

இலங்கை நாடாளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் இல்லாத குறையைத் தனி ஒருவராக நின்று நிரப்பியவர் அவர் அரசாங்கம் தமிழருக்கு எதிராக தொடுத்த அக்கிரம அநியாயங்களை அடுக்கு வேறு ஆணி வேருடன் பிடுங்கி வெளிஉலகுக்குக் காட்டியவர்

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகத் துணி சலுடன் குரல் கொடுத்த செம்மல்.

தமிழ் மக்களின் பிரதிநிதி ஒருவர் அக்கறைப் படாத அளவுக்கு தமிழர் விவகாரங்களிலும், நலனிலும் அவர் அக்கறை கொண்டவர்

கடைசி, கிழக்கில் அவர் போட்டியிட நினைத்திருக்கவில்லை அப்பகுதி மக்களின் வேண்டுகோளை எதிர்பார்த்து அவர்களுக்காகப் போட்டியிட்டார்

ஒடுக்கப்படும், அடக்கப்படும் மக்களுக்காகப் பாடுபடும் அவரது இயற்கையான குண இயல்பே அவரை தமிழர்களுக்காகப் பேச வைத்தது நீதி நியாயம் ஆகியவற்றின் பக்கம் நிற்கும் அவரது சீரிய எண்ணமே அவரைத் தமிழர்களுக்காகப் பேசவைத்தது. கையாறு கருதாமல் அவர் செய்த உதவி காலத்தால் அழியாது.

திரு சரத் நீதியின் பக்கமும், நியாயத்தின் பக்கமும் நின்று பேசுவதைப் பார்த்தீர்கள் 30-1-1985 இல், இப்பத்தியில் "சரத்தின் நியாயக் குரல்" என்ற தலைப்பில் எழுதியிருந்தோம்.

அந்த நியாயக் குரலை – தனிக்குரலை இனி நாடாளுமன்றத்தில் கேட்க முடியாது தமிழ் மக்களுக்காக ஒலித்த ஒரேயொரு நியாயக் குரலும் ஓய்ந்துவிட்டது இது தமிழர்கள் செய்த பெரும் குற்றங்களில் ஒன்று

திரு சரத்தின் மறைவால், நாடாளுமன்றத்திலே, தமிழ் மக்களின் குரல் மட்டுமன்றி, உழைக்கும் மக்களின் குரல் தேயிலைத்தோட்டங்களின், தேசாபிமானிகளின் குரல், முற்போக்கு எண்ணமுடையவர்களின் குரல் மௌனமே ஓய்ந்துவிட்டன. திரு சரத் ஒரு தனிமனிதராக நின்று ஒரு மனிதநேயமிக்கவராக நின்று, பல்வேறுபட்ட மக்களின் கருத்துக்களைப் பிரதிபலித்தார்

அவர் ஓர் அரசியல் வாதியாக மட்டும் இயங்கவில்லை அல்லது சிறப்பும் பெறவில்லை தேசியவாதியாக, மக்களபிமானியாக, உண்மைத் தொண்டனாகவும், உத்தம நண்பனாகவும் அவர் பிரயாணம் பெற்றார் மொத்தத்தில் அவர் மனித நேயத்தின் சிறப்புக் சின்னமாக விளங்கினவர்

அவரது மறைவு, தனி சமூகத்துக்கு, தனி இனத்துக்கு, தனி வர்க்கத்துக்கு மட்டும் அன்றி மனிதகுலத்துக்கே பேரிழப்பாகும். நீதிக்கும், நியாயத்துக்கும், மனிதாபிமானத்துக்கும் பெரும் இழப்பாகும் எவராலும் நிரப்ப முடியாத நஷ்டமாகும்.

குறுகிய காலத்தில் பெருகிய சேவை செய்து புகழுடையோர் நடுவதில் இறந்துபோகும் நியதியில் சரத்தும் அகப்பட்டனரோ! அன்றி சதி மூலம் அரசு விதி பறிக்கப்பட்டதோ என்பது இனித்தான் தெரிய வேண்டும்.

மாணவருக்கு மேலதிக வாசிப்பு நூல்கள்
கல்விக்குழு வெளியிட்டுள்ளது

மனாலி, மே.20

பாடசாலை மாணவர்களுக்கான மேலதிக வாசிப்பு நூல்களாக கல்வி அமைச்சின் சனத் தொகை கல்விக்குழு சில நூல்களை வெளியிட்டுள்ளது.

வடபகுதி மாணவர்களுக்கும் இந் நூல்களின் தமிழ் மொழி பெயர்ப்பு கள் வழங்கப்படுகின்றன

10 ஆம் தரத்திற்கு 'மனிதனும் குழலும்' என்ற நூலும், 9 ஆம் தரத்திற்கு 'இலங்கையின் சனத்தொகையில்' என்ற நூலும், 6ஆம் தரத்திற்கு 'சனத் தொகையும் இயற்கைமூலவளங்களும்' என்ற நூலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

ராஜீவ் மறுப்பு

பெனாஸிர் பூட்டோவுக்கு உதவி அளிப்பதான குற்றச்சாட்டுக்கு

புதுடில்லி, மே 19

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவி பெனாஸிர் பூட்டோவிற்கு பாரதம் உதவி புரிந்து வருகின்றது என்ற குற்றச்சாட்டை பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி மறுத்தார்

நான்கு ஆபிரிக்க நாடுகளுக்கான தமது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பிய பிரதமர் ராஜீவ் காந்தி டில்லி விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களிடம் நடந்து கொண்டிருக்கிய பொழுது இவ்வாறு தெரிவித்தார்

பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவியான பெனாஸிர் பூட்டோவிற்கோ அன்று மக்கள் கட்சிக்கோ பாரதம் எவ்வித முறைமுகமாக ஆதரவளிப்பதாகவோ அவர்கள் பொழுது உதவியும் புரிகிறதாக பாகிஸ்தான் அதிர்ஷ்டவசமாக—உண்மை கூறியிருப்பது ஆதாரமற்றது. பாரதத்தைப் பொறுத்தவரை அவ்விதம் உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணமுமில்லை அதற்கான தேவையுமில்லை

இப்படி ராஜீவ் காந்தி கூறினார்.

சாம்பியா, மொசாம்பிக், அங்கோலா, தன்சானியா ஆகிய நாடுகளுக்கான தமது பயணம் பெரும் வெற்றியை ஈட்டித் தந்ததாகவும் அந்த நாடுகளுக்கு தலைவர்களுடன் பல பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை நடாயப்பட்டதாகவும் ராஜீவ் காந்தி தெரிவித்தார்.

அந்த நாட்டுத் தலைவர்களுடன் இன்று ஏடுக்கலுக்கான எதிர்ப்பு, வளர்ச்சி நாடுகளிடையே ஒருமைப்பாடு, மண்டலசார் பற்ற நாடுகளின் எதிர்காலம், தென் ஆபிரிக்காவினது நிலைமைப்பாடு ஆகியவைபற்றியும் கருத்துப்பரிமாறல் இடம்பெற்றது என்றார்

வெளி உலகில்

காவிரிநீர் பங்கீடு:
மத்திய அரசு தீர்த்துவைக்க வேண்டும் என்கிறார் நெடுஞ்செழியன்

சென்னை மே 19

காவிரி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட்டு சுமுகமான தீர்வுக்கு வழிகுக்க வேண்டும் காவிரி நீர் பங்கீடு 1924 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றது. ஆனால் அதில் சிறுமாற்றம் மட்டும் செய்தால் வேண்டும்.

மேலதிகமான நீர்விநியோகம்பற்றி அந்த ஒப்பந்தம் எதுவுமே சொல்லவில்லை அதை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழக சட்டசபையில் நிதி அமைச்சர் திரு இரா நெடுஞ்செழியன் தெரிவித்தார்

1924 ஆம் ஆண்டுமைசூர் ராஜாக்களின் காலத்தில் வலிச்சாற்றிடப்பட்ட ஒப்பந்தம் நாடு ஜனநாயக மடைந்த பின்னரும் பொருத்தமுடையதாக இருக்கமுடியாது. எனவே அது மாற்றப்பட வேண்டும் என கர்நாடக மாநிலம் பிடிவாதமாக இருந்த கருத்து குறிப்பிடத்தக்கது.

அகதிகளை திருப்பி அழைக்க பங்களாதேஷ் இணக்கம்

டாக்கா, மே 19

இந்தியாவின் மேற்கு திரிபுரா மாநிலத்திலிருக்கும் தமது நாட்டு அகதிகளை திருப்பி அழைப்பதற்கு பங்களாதேஷ் அரசு இணக்கம் தெரிவித்துள்ளது

சிட்டகொங் மலைச் சாரக்கலவரத்தை அடுத்த ஏற்பட்ட 30 ஆயிரக்கணக்குப்பேர் குடியேறியிருந்தவர்கள் முதலில் மீள அனுப்பிக்கப்படுவர்

இவர்கள் தேர்தல் கால மோதலை அடுத்த இடம் பெயர்ந்தார்கள் என்று கூறப்படுகின்றது.

தமிழக சட்டசபைக்கு புதிய கட்டடம்

சென்னை, மே 19,

தமிழ்நாடு சட்ட சபைக்கான புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்படுகிறது.

இதற்கான தகுந்த இடம் ஒன்றைக் கண்டு பிடிப்பதில் தமிழக உள்துறை அதிகாரிகள் தீவிர வேகம் செலுத்திவருகின்றார்கள்.

தற்பொழுது சட்டசபை அமைந்துள்ள கோட்டைக்கு எதிர்ப்பக்கமாகவுள்ள கான்சிபாரக் செய்யப்பட்டபொது பல வசதிகுறைவுகள் கட்டிக்காட்டப்பட்டதை அடுத்து, வேறு இடத்தைத் தெரிவு செய்வதற்கு வேகம் திசை திருப்பப்பட்டுள்ளது.

கண்டி குதிரைப்பந்தயத் திடல், தமிழக ஆளுநர் வதிவிடமான ராஜ்பவன், 'அரசு தோட்டம்' இவற்றில் ஏதாவது ஒரு கட்டிடத்தில் புதிய பிரமாண்டமான சட்டசபைக் கட்டடம் உருவாகும் என நம்பப்படுகிறது

வட துருவத்திற்கு நடந்து சென்றவர்

வட துருவத்தை நடந்தே சென்று அடைந்த முதல் வெளி ஆராய்ச்சியாளர் என்ற பெருமை

எம் பி களுக்கும் பரிசுத் திட்டம்

சென்னை, மே 19

தமிழ்நாடு சட்ட சபை கட்டடங்களுக்கு இரமணாப் பகுதியும் உறுப்பினர்களுக்கு பரிசுத் திட்டம் ஒன்று நிதி அமைச்சர் வி ஆர் நெடுஞ்செழியனால் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

ஒவ்வொரு வருடமும் விசேட வைபவரொன்றில் இப்பரிசுப் பணம் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் இத்திட்டத்தின் கீழ் நூறாண்டுவிழாக் கட்டிடங்களில் பங்குபற்றிய உறுப்பினர்களுக்கு 300 ரூபா ஊக்குவிப்புப் பரிசும் 88 தொடக்கம் 99 சதவீதம்வரை சமூகமளித்தோர்க்கு 200 ரூபாவும், 75 தொடக்கம் 87 வீதம் வரைக்கு நற்தோர்க்கு 100 ரூபாவும் வழங்கப்படும்.

தமிழ்நாடு சட்ட சபை அங்கமாகிய கூடிய பொழுது நொஞ்செழியனால் அறிமுகப்படுத்தப்பட்ட இத்திட்டம்பற்றி ஆராயப்பட்டது.

கடல் உணவு தடை

மொஸ்கோ, மே 19

ரஷ்யாவில் அணுமையில் இடம்பெற்ற அணு உலை வெடிப்பை அடுத்து மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து கடல் உணவு வகைகளைக் தருவிப்பதை ஐரோப்பிய பொதுச் சந்தை தடை செய்துள்ளது

கொழும்பு திருச்சி மேலதிக விமானசேவை

சென்னை மே 19

கொழும்புக்கும் திருச்சிக்கும் இடையான மேலதிக விமான சேவை ஒன்றை இந்தியன் ஏர்லைன்ஸ் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையும் நடத்தும்.

கொழும்பிலிருந்து காலை 9 21 க்குப் புறப்படும் விமானம் காலை 10 15 க்கு திருச்சி வந்தடையும் காலை 11 00 மணிக்கு திருச்சியிலிருந்து புறப்பட்டு 11 50 க்கு கொழும்பை அடையும்.

மதியம் 12 30 க்கு கொழும்பிலிருந்து புறப்பட்டு 1 40க்கு சென்னை வந்தடையும்

விமான விபத்தில் 19 சிப்பாய்கள் பலி

புதுடில்லி, மே 19

பிரான்ஸில் கடற்படை விமானம் ஒன்று பயிற்சி நடவடிக்கையின் போது விழுந்து நொறுங்கி வெடித்ததில் 19 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்

மூக்கு ஆபிரிக்க இராச்சியமானஜிபூட்டிக்கு வடக்கே இந்த விபத்து நிகழ்ந்தது.

காலநிலை சீரற்றிருந்ததே விபத்துக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

10 பேர் பலி

புதுடில்லி, மே 20

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள கர்னூல் மாவட்டத்தில் ஓடுநர் நிகழ்ந்த கொடூர விபத்து ஒன்றில் பத்துபேர் கொல்லப்பட்டனர் ஐந்துபேர் படுகாயமடைந்தனர்.

வாசகர் திருமகம்

காக்கைதீவில் வயல்களை கடல் கொள்ளும் ஆபத்து

காக்கைதீவுக் கடற்கரையில் பலர் தினமும் பெருமளவில் மண் அகழ்ந்து செல்கிறார்கள். அரிப்பு சிப்பி சிறுறி எடுப்பதற்காகச் சிலர் கிடங்கு வெட்டுகிறார்கள். கிடங்கு வெட்டப்படும் பொழுது வரும் மணலையே இங்கெல்லாம் சாரார் ஏற்றிச் செல்கிறார்கள்.

இதனால் ஊட்டுக்கு எதிர்ப்பக்கமுள்ள வயல்களில் மாரிகாலத்தில் கடல் நீர் புகுந்து அப்பகுதி விவசாயத்திற்கு பேரழிவு ஏற்படுகிறது ஆபத்து உருவாகிறது.

இதிலிருந்து வயல்களை கடல் நீர் வயல்களில் ஊடுருவாமல் தடுக்கும் ஆபத்து இருந்து வருகிறது.

எனவே, மனிதாபிமானமுடன் பொது நலனை உணர்ந்து கொண்டு மண் அகழ்ந்து செல்லும் நிறுவனங்களுடன் சம்பந்தப்பட்ட அனைவரையும் அப்பகுதி விவசாயிகளாகிய நாம் வேண்டுகிறோம்.

பொ. சிதம்பரநாதன்
ஆனைக்கோட்டை.

இந்தியா மற்றும் சமாதானம் விரும்பும் நாடுகள் இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும்

பத்மநாபா கூறுகிறார்

புதுடில்லி, மே 19

இலங்கை அரசின் கொடூர தன்மையுள்ள இராணுவ நடவடிக்கையை நிறுத்த இந்தியாவும் சமாதானத்தை விரும்பும் நாடுகளும் ஆக்கபூர்வ நிர்ப்பந்தத்தைச் செலுத்தவேண்டும்.

இப்படி ஈழவிடுதலை இயக்கங்களின் முன்னணியின் தலைவர் திரு பத்மநாபா தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது; இலங்கை முழுவதும் இரத்தக்களரி ஏற்படும் ஒன்றை பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

தெவலவர்த்தனா அரசின் படுகொலை நோக்கத்தைத் தடுப்பதற்கு எந்த முன்னணியின் நடவடிக்கைக்கோ தனிர்பவடுத்துவதை தனிர வேறு வழியில்லை.

கடந்த இரண்டு வாரங்களாக வன்னியை சூழ்ந்திருக்கை எமது மக்கள் எதிர் நோக்கியுள்ளனர். எனது மக்களுக்கும் தாய நகரத்தில் இறைமைக்கும் மிரட்டல் ஏற்படுகிறது

எமது தாயகத்தின் மீது இறுதித் தாக்குதலை நடத்துவதற்கு படையினர் தயாராகி வருகின்றனர்.

இவர்களது அரசின் இச் செயல்களுக்கு மேற்கு நாடுகளும் அவற்றின் பொம்மை நாடுகளான இஸ்ரவேல், பாகிஸ்தான், தென்ஆபிரிக்கா ஆகியவும் துணைபோகின்றன. இராணுவ உதவிகளும் வழங்குகின்றன

இப்படி திரு பத்மநாபா சொன்னார்.

பாடசாலையில் பற்சிகிச்சை முகாம்

மருத்துவதுறை, மே 20

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரத்தின் பற்சிகிச்சை முகாம் ஒன்றை வரவேட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் முதல் முறையாக நடத்தவதற்கான முயற்சியை கரவெட்டி ஆரம்ப சுகாதாரத் கவனிப்பு நிலையத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்

வாசகர் கேள்வியும் பதிலும்

கேள்வியாளர்

குறள்:-
ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்கும்
பொன்றுந் துணையும் புகழ்
பொருள்:-
தீங்கு செய்தவரைப் பொறுக்காமல் வருந்துபவர்க்கு ஒருநாள் இன்பமே; பொறுத்தவர்க்கு உலகம் அழியுமவரைக்கும் புகழ் உண்டு

பனை அபிவிருத்திச் சபையின் பனம் சாராய உற்பத்தி திட்டம் பெருவெற்றி

பலாலி, மே 20

பனை அபிவிருத்திச் சபையின் மிகப்பெரும் திட்டங்களில் ஒன்றான பனம் சாராய உற்பத்தி மிகுந்த வெற்றியளித்துள்ளது.

இதுவரை காலமும் பனை உற்பத்திப் பொருளான பனங்கள்ளு, குறிப்பிட்ட உற்பத்திக் காலத்தில் தேங்கிக் கிடப்பது மேலதிக உற்பத்தியினை வீணாக நிலத்தில் ஊற்றி அழிக்க நேரிட்டது.

பனை அபிவிருத்திச் சபை கனரக இரசாயன பனம் பொருள் தொழிற்சாலையில் அமைந்த வடிசாலையின் மூலம் இக்கள்ளினை சேகரித்து சாராயம் வடித்து வருவதால் இந்தச் சேதாரம் தவிர்க்கப்பட்டிருக்கிறது

இதுவரை காலமும் வடிசாலைக் கட்டுமானப் வசதிகளிருந்தாலும் சாராயம் வருமானத்தைப் பெறக் கூடியதாகவுள்ளது

பல ரகங்களிலும் ஏனைய சாராய வகைகளிலும் பார்க்க குறைந்த விலையிலும் மலிவு சாராயமாகவும் பெறுவதாகவுமுள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனம் சாராய உற்பத்தி மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது என்று பனை அபிவிருத்திச் சபை தலைவர் திரு. ந. சரவணபவன் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு மேலதிக வாசிப்பு நூல்கள்
கல்விக்குழு வெளியிட்டுள்ளது

மனாலி, மே.20

பாடசாலை மாணவர்களுக்கான மேலதிக வாசிப்பு நூல்களாக கல்வி அமைச்சின் சனத் தொகை கல்விக்குழு சில நூல்களை வெளியிட்டுள்ளது.

வடபகுதி மாணவர்களுக்கும் இந் நூல்களின் தமிழ் மொழி பெயர்ப்பு கள் வழங்கப்படுகின்றன

10 ஆம் தரத்திற்கு 'மனிதனும் குழலும்' என்ற நூலும், 9 ஆம் தரத்திற்கு 'இலங்கையின் சனத்தொகையில்' என்ற நூலும், 6ஆம் தரத்திற்கு 'சனத் தொகையும் இயற்கைமூலவளங்களும்' என்ற நூலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

கைதடி - கோப்பாய் பாலம் திருத்த வேலை நடைபெறுகிறது.

கைதடி, மே 20

கைதடி – கோப்பாய் பாலத்தின் திருத்த வேலைகள் பெருவெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதனால் இப்பாதையூடாக வாகனப் போக்குவரவுக்கு ஒரு மிதமான நடைசெய்யப்படுகிறது.

வாகனங்கள் வாழ்ப்பாணத்திலிருந்து வருகிறதா துறவிநியூடாக சென்று புத்தூர் சந்தியில் திரும்பி வரும்புவியடியூடாக சாவகச்சேரியை அடைந்து பயணம் செய்கின்றன.

தகவல்
திணைக்களத்துக்கு வேலிப்பாதுகாப்பு

கொழும்பு, மே 18

கொழும்பில் உள்ள அரச தகவல் திணைக்களத்தின் எல்லை வேலி உயர்த்தி அமைக்கப்படுகின்றது

அண்மையில் வெடி குண்டுத் சம்பவத்தில் சேதமடைந்த மத்திய தபால் தந்திநிலைய கட்டிடத்தினை மீளக் கட்டி அமைக்கும் பணி நடைபெறுகிறது.

இதனால் தகவல் திணைக்களம் பொருள் தொழிற்சாலையில் அமைந்த வடிசாலையின் மூலம் இக்கள்ளினை சேகரித்து சாராயம் வடித்து வருவதால் இந்தச் சேதாரம் தவிர்க்கப்பட்டிருக்கிறது

இதுவரை காலமும் வடிசாலைக் கட்டுமானப் வசதிகளிருந்தாலும் சாராயம் வருமானத்தைப் பெறக் கூடியதாகவுள்ளது

பல ரகங்களிலும் ஏனைய சாராய வகைகளிலும் பார்க்க குறைந்த விலையிலும் மலிவு சாராயமாகவும் பெறுவதாகவுமுள்ள பனை அபிவிருத்திச் சபையின் பனம் சாராய உற்பத்தி மிகுந்த வரவேற்பு பெற்றுள்ளது என்று பனை அபிவிருத்திச் சபை தலைவர் திரு. ந. சரவணபவன் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நகரின்
தரமான
போட்டோ ஸ்ரற் பிரதிக்கு
ஞானம்ஸ் ஸ்ருடியோ
301, Clock Tower Road
JAFFNA
TPhone: 23067

உதயன்

20.05.1986 செவ்வாய்க்கிழமை

கலர் பிலிம் சுருள்கள் கூடிய விரைவில் கழுவிக் (Proccessing & Printing) கொள்வதற்கு
ஞானம்ஸ் ஸ்ருடியோ
போஸ்கார்ட் பிரதி ஒன்று ரூ 5 75
நெகடிவ் ஆக்குவதற்கு (Proccessing) இலவசம்
301, Clock Tower Road, JAFFNA.
TPhone: 23067

இராணுவத் தீர்வை ...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய இலங்கைத் தூதர் பேர்னாட் நிலை ரட்ன என்னிடம் கூறினார்

அப்போது அவர் தெரிவித்த கருத்துக்கள் இலங்கையில் பிரதிய யோசனையில் மாறுகள் இருப்பதைக் காட்டியது

தனது யோசனைகளுக்கு இலங்கை அரசு ஆதரவளிக்காத நிலையும் உருவாகியுள்ளது தெரிகிறது. பிரதிய யோசனைகளைத் தமிழர் குழுக்களிடம் முன் இந்தியா வைக்கவுள்ளது இத் தருணத்தில் இலங்கை அரசு பலவீனப்படுத்தும் எந்த நடவடிக்கையையும் எடுக்கக் கூடாது-

இப்படி பிரதமர் காந்தி சொன்னார்

இலங்கையில் தமிழர் மீது நடத்தப்படுத் தாக்குதல் எதோடு இந்திய நிறுத்தப் போகிறது என்று செய்தியாளர் ஒருவர் கேட்டார்.

வருத்து வேறுபாட்டை உருவாக்கும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபடாது என்று அக்கேள்விக்குப் பதிலளிக்கையில் பிரதமர் காந்தி சொன்னார்

இதற்கிடையில், மத்திய மந்திரி முனம் பேசுவதை விரித்து, இலங்கை அரசுடன் இந்திய அரசால் மேலே நேரடியாகப் பேசுதல் வேண்டும் என்று ராஜீவ் சார்பு ஜனதா குழுத் தலைவர் திரு ஏரு பாகசுவாமி சொன்னார்

செக்கோவில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் இதனைத் வெளியிட்டார்.

சரத்தின்மறைவு பலரும் அதிர்ச்சி

கொழும்பு நகரம், மே 20 நேற்று முன்தினம் கலவான தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் சரத் முத்தெட்டுவேகம விபத்தில் அகால மரணமடைந்தது குறித்து அதிர்ச்சியும் கவலையும் தெரிவித்த பல ஸ்தாபனங்கள் அறிக்கை வெளியிட்டிருக்கின்றன

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், நவ லோக சமசமாஜ கட்சி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய

வைகளே அஞ்சலி தெரிவித்து அறிக்கைகளை நேற்று வெளியிட்டுள்ளன.

ஜீப் விபத்து ஞாயிறிரவு நிகழ்ந்தது. விபத்து நிகழ்ந்த இடத்திலேயே சரத் மரணமானார்.

விபத்து குறித்து தெரிய வருவதாவது:-

திரு சரத் முத்தெட்டுவேகம இன்னும் இரண்டு வருடன் சிரத் தினபுரி புதிய நகரத்திற்கு ஜீப்பில் சென்று கொண்டிருந்தார்.

அந்த சமயம் மழை பெய்து கொண்டிருந்தது. எதிரே இன்னும் ஒரு ஜீப் வந்தது ஜீப்பை செலுத்திக் கொண்டு வந்த சரத் மற்ற ஜீப்பில் மோதாமல் இருப்பதற்காக திருப்பினார்

என்றாலும் ஜீப்புகள் எப்படியோ மோதிக் கொண்டன

சரத்துடன் வந்தமற்ற இருவரும் மூர்ச்சை இழந்த நிலையில் இரத்தினபுரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான மற்ற ஜீப்பில் வந்த ஏழு பேருக்காயமடைந்தனர். அவர்களும் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்

விபத்து பற்றி பலவாறாகப் பேசப்படுகிறது.

யாழ்ப்பாண நகரின் ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தன் நடந்த இடங்கள் மட்டுமன்றி யாழ் நகரமும், சுற்றவட்டாரங்களும் அதிர்ந்தன.

அடுத்தடுத்த விமானத் தாக்குதல் வீச்சுக்கள் கொடுத்துச் சிதறியபோது வானமே இடிந்து விழுந்தது போன்ற சத்தம் கொண்டிருந்தது

யாழ் நகர் பஜார், கொட்டடிப் பகுதி ஆகியவையே குண்டு வீசினால் கொடூர சேதமடைந்தன

இதேவேளை ஹெலிகொப்டர் சுட்டுவதால் யாழ் நகரும் அதைச் சுற்றிய இடங்களும்

ஆஸ்பத்தி ..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்தன

இதனால் வட்டிலுள் இருந்த இராசதாயம் (வயது 17) என்ற நோயாளிக்கு காலில் காயம் ஏற்பட்டது

ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைக்கென கொண்டு வரப்பட்ட தண்ணீர்த்தாங்கியும் வேறு தண்ணீர்ப் பைப்புக்களும் சேதமடைந்தன.

குண்டு வீச்சு நிகழ்ந்த சமயம் பதறிப்போன நோயாளிகள் தமது கட்டிலுக்குக் கீழ் பதுங்கிக் கொண்டனர்.

வயாவிளான் வித்தியாலயம் ராணுவமுகாம்

பலாலி ராணுவ தளபதி யாழ் அரச அதிபருக்கு அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 20 வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இராணுவ முகாமாக்கப் பயன்படுகின்றது.

பலாலி இராணுவ முகாம் தளபதி இக் கல்லூரியின் கவர்மியை நேற்றி அரச அதிபருக்கு அறிவித்தார்

கல்லூரி அதிபர் திரு. எம். கனகசபாபதி அரச அதிபருடன் தொடர்பு கொண்டு போதே அரச அதிபர் இத் தகவலைத் தெரிவித்தார்

1800 க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் இக் கல்லூரியில் ஜி. சி. ஈ உயர்தர வகுப்புகள் வரை உள்ளன.

மூன்று தினங்கள்.

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து செல்ல முடியாமல் பரந்தன் உமையாள்புரம் மகா வித்தியாலயத்தில் தங்கியிருந்தோம்.

மீண்டும் திக்கம் பரந்தனில் இருந்து புறப்பட்டோம். ஆயிரவத்தடை முகாமில் எம்மைச் சோதனைக்காக மறித்த படையினர் எமது பஸ்ஸில் இருந்த 25 மாணவர்களை வைத்து செய்து தம்முடன் அழைத்துச் சென்றனர்.

அதன் பின்னர் நாம் மாலை யாழ் நகர் வந்து சேர்ந்தோம்.

இப்படி அவர் சொன்னார்.

கடற்படை ....

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து புலுக்காடு நோக்கி 88 நவீன ரக வாகனங்களுடன் நகர்ந்த இராணுவத்தினர் எமது வீரர்களின் திட்டமிடப்பட்ட தாக்குதல்களினால் தகர்க்கப்பட்ட வலைப்புலுடன் பூரணமாக முகாமிற்குத் திரும்பி ஓடினர்.

இந்த நேரடிமோதலில் மக்களுக்காக மரணித்த எமது வீரன் கதிலுக்கு (ஒன்றை) வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றோம்.

நேற்று பிற்பகல் வெட்டித்துறை கடற்படைக்கு பாரிய போர்க்கப்பல் ஒன்று வந்தது.

கப்பலில் இருந்து கரைக்கு வந்த சிறிய கடற்படை ரோந்துப் படகு ஒன்று எமது ரெக்ட் தாக்குதலினால் திப்பற்றி எரிந்து நிர்மூலமானது. 'கன் போட்' ஒன்று நகர்க்கப்பட்டது.

மற்றைய சோதப்பகுதியுடன் வானத்துக்கு தலுக்குள் வானத்தை அடுத்து அணுத்தக்கப்பல்களும் பிடிக்காகின

—இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வயோதிபர்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கு குமாரசாமி (65 வயது) என்பவர் அந்த இடத்திலேயே மரணமானார்.

புலையிரத நிலையத்திற்கு அருகேயுள்ள இரண்டாவது ஸ்டேஷன் விழுந்ததினால் ஐந்தடிக்காயமடைந்தனர். வார் ஒன்றும் வீட்டுத்தகரப் படங்களும் சேதமடைந்தன,

கவசவாகன

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

மீள முடிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது

நேற்று நண்பகல் 12 மணியளவில் ஒரு குண்டு வீச்சு விமானமும், இரண்டு ஹெலிகொப்டர்களும் வலி மிட்டவாறு சாவகச்சேரியை வானவெளி சகிதம் இப்பகுதியை நோட்டமிட்டு சென்றடைந்தன.

ஆர்ப்பாட்டம்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிக்கப்பட்டன.

ஹெலிகொப்டரிலிருந்து சுடப்பட்ட ரவைகள் வீட்டுக்கூரை தீக்கப்பட்டன

இலக்குகள், எல்லைகள் நோக்கமின்றி மக்கள் பரந்து வாழும் குடிகளை நோக்கி பரவலாக ஹெலிகொப்டர்கள் வெட்டுகளை தீர்த்தனர்

நகரின் மத்தியில் உள்ள ஆனை வீடுகள், கட்டடங்கள் அனைத்திலும் ஹெலிகொப்டரிலிருந்து தீக்கப்பட்ட குண்டுகளின் சேதங்கள் காணப்பட்டன.

அரசியல்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரியின் அபிவிருத்திச் சங்கமாகிய நலன்புரிப் படும் கோழிப்பண்ணை, காட்டுப் பண்ணை என்பனவும் இங்கு உண்டு.

பாடசாலைகளை 12 மணியுடன் மூடுக!

யாழ்ப்பாணம், மே 20 இன்று செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ் நகரவட்டத்தில் உள்ள சகல பாடசாலைகளில் மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் தத்தமது பாடசாலைகளில் இருந்து வெளியேற வேண்டும் என்று தமிழீழ மாணவர் பேரவை அறிக்கை ஒன்றில் கோரி உள்ளது

அறிக்கையின் முழுவிபரம் வருமாறு:-

வரலாறான தமிழ் மகாவித்தியாலயத்திலும் ஊர்காவற்றுறை செம் அன்றாலின் (புனித அந்தோனியார்) கல்லூரியிலும் சிங்கள இராணுவம் முகாமிட்டுள்ளது.

இந்நடவடிக்கை தமிழ் பேசும் மாணவர்கள், ஆசிரியர்கள் தமது ஆக்ரோஷமான உணர்வுரீதியான எதிர்ப்பு நடவடிக்கையைத் தெரிவிக்க வேண்டியது அவசியமான தொன்றாகும்.

ஹலோ, உங்களைத்தான்!

MCTக்கு வந்து பார்த்தீர்களா?
ரெலிபோன் அழைப்புகள், ரெலெக்ஸ் செய்திகள்
நெடிப் பொழுதில் கிடைக்கின்றனவே!

DENMARK செல்ல விரும்புவர்கள் உடனடியாக எம்மிடம் தொடர்புகொள்ளவும்

இடமோ பாதுகாப்பானது
சூழலோ அமைதியானது.
உபசரிப்போ இனிமையானது.
கட்டணமோ நியாயமானது
சேவையோ 24 மணி நேரமும்.
தங்கிச்செல்ல படுக்கையறை வசதிகூட உண்டு.

வெளிநாட்டுப் பிரயாணங்கள்
விமானச் சீட்டுகள், பாஸ்போர்ட்
விசா சம்பந்தமான விஷயங்களுக்கும் புகழ்பெற்ற
நிறுவனம்.
MCT.

இதைவிட இனியென்ன வேண்டும்?

MCT
Mack Communications
& Travels
இல: 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
TELE: 24791, 24836

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், விக்டோரா நிலையவீதி, இரண்டாம் ஒழுங்கை, 18 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் லிமிடெட்டில் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது
வெளியிட்ட திகதி: 20 - 05 - 1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 18, Second Lane, Power House Road Jaffna.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under number [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org